# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051847

1. District : மாவட்டம் மதுரை | PS: காவல்நிலையம் ஊ.த.க. மதி | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 17/2021 | Date: நாள் 03.12.2021

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: u/s 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: ஊ.த.க. சட்டம் 1988 | Sections பிரிவுகள்: as amended by the PC
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1) 01.11.2021 at 13.30 hrs 2) 02.12.2021 at 15.15 hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.12.2021 | Time : நேரம் 13.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.12.2021 | Time : நேரம் 14.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 30 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ் நாடு மின்வாரியம், மதுரை பகிர்மான வட்டம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பா.கிளமெந்ராஜா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பாண்டித் தேவர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2021 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி முத்தையன்புரம் புதூர், பொன்னமங்கலம், திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு.முகம்மது உசேன், உதவி பொறியாளர், செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ் நாடு மின்வாரியம், மதுரை பகிர்மான வட்டம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................—..........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..............—........ பதவி ......—............ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. [illegible] 3.12.2021 | [signature] 03/12/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.12.2021 at 15.00 hrs.

Name: பெயர் A. அம்புரோஸ் ஜெயராஜ்
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண்
உ.த.க. பிரிவு,
மதுரை (03.12.2021)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

**இன்று 03.12.2021-ஆம் தேதி மதியம் 13.30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் போது, திருமங்கலம் தாலுகா, பொன்னமங்கலம் கிராமம் பாண்டித்தேவர் மகன் திரு.பா.காட்டுராஜா என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு:** அனுப்புநர் பா.காட்டுராஜா, த/பெ பாண்டித்தேவர், முத்தையாபுரம் புதூர், பொன்னமங்கலம், திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா பொன்னமங்கலம் முத்தையாபுரம் புதூர் கிராமத்தில் உள்ள எனது தோட்டத்தில் மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசிக்கிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எங்கள் ஊரில் எனக்குச் சொந்தமான 14 ஏக்கர் நஞ்சை நிலத்தில் விவசாயம் செய்து பிழைத்து வருகிறேன். பொன்னமங்கலம் சர்வே எண் 96 / 6E3-ல் உள்ள எனது விவசாய நிலத்தில் ஒரு போர்வெல் போட்டுள்ளேன். அதற்கு தமிழக அரசின் சுய நிதித் திட்டத்தில் ரூ.25,000/- செலுத்தும் இலவச மின்சாரத் திட்டத்தின் கீழ் 10 HP மின் இணைப்பு பெறுவதற்கு கடந்த 03.03.2010-ம் தேதியன்று திருமங்கலம் மின் செயற் பொறியாளர் அலுவலகத்தில் ரூ.500/- கட்டணம் செலுத்தி விண்ணப்பம் கொடுத்தேன். அதற்காக, வரிசை எண் 105 / 09-10-ன் கீழ் சிறிய அட்டையில் சான்றிதழ் வழங்கினார்கள். அதன் பின்னர் எனக்கு இதுவரை இலவச மின் இணைப்பு கிடைக்கவில்லை. கடந்த 10.10.2021-ம் தேதியன்று திருமங்கலம் செயற் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து எனக்கு வந்த முன் அறிவிப்பு கடிதத்தில் அடுத்த 30 நாட்களுக்குள் இலவச மின் இணைப்புக்கான மதிப்பீட்டுத் தொகையை செலுத்த தயாராக இருக்குமாறும், அதற்கான அறிவிப்புக் கடிதம் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது. எனவே, நான் கடிதம் வந்து ஒரு வாரம் கழித்து திருமங்கலம் மின்சார அலுவலகத்திற்குச் சென்று விசாரித்த போது நிலத்தின் பட்டா, அடங்கல், வரைபடம் ஆகியவற்றின் நகல்களை எடுத்துச் சென்று உதவி பொறியாளர் திரு.முகம்மது உபேஸ் என்பவரைப் பார்க்கும்படி சொன்னார்கள். அதன்படி தீபாவளிக்கு 3 நாட்கள் முன்னதாக கடந்த 01.11.2021-ம் தேதியன்று மதியம் சுமார் 01.30 மணிக்கு திருமங்கலம் மின்சார அலுவலகத்துக்கு சென்று எங்கள் பகுதியின் உதவி பொறியாளர் திரு.முகம்மது உபேஸ்

அவர்களைச் சந்தித்து எனக்கு வந்த கடித்த்தைக் காண்பித்து எனது நிலத்தின் பட்டா, அடங்கல், வரைபடத்தின் நகல்களைக் கொடுத்தேன். அவர் அவற்றை வாங்கி வைத்துக் கொண்டு, சீனியாரிட்டி அடிப்படையில் கடிதம் அனுப்பிக் கொண்டிருக்கிறோம், எப்படியும் இந்த மாதம் உங்களுக்கு கடிதம் வரும், கடிதம் வந்தவுடன் ரூ.25,000/- ரூபாயுடன் என்னை நேரில் வந்து பார்த்தால் உடனே மின் இணைப்பு கொடுத்து விடலாம் என்று சொன்னார். நான் அவரிடம் டி.டி. மூலம்தான் பணம் கட்ட வேண்டும் என்று சொன்னார்களே என்று கேட்டேன். அதற்கு அவர் டி.டி. மூலம் அரசு கட்டணம் 24,500/- செலுத்த வேண்டும், அது தவிர உங்களுக்கு இலவச மின்சார இணைப்பு கொடுப்பதற்காக எனக்கு தனியாக ரூ.25,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் அவரிடம் நீங்கள் கேட்கும் பணம் மிக அதிகமாக உள்ளதே என்று சொன்னேன். அதற்கு அவர் இலவச மின்சார இணைப்புக்கு மிகவும் போட்டியாக உள்ளது, நான் உங்களுக்கு குறைந்த பணம்தான் கூறியுள்ளேன், எனவே அடுத்த கடிதம் வந்தவுடன் நான் கேட்ட பணத்துடன் என்னை வந்து பாருங்கள் என்று சொல்லி எனது போன் நம்பரை வாங்கி வைத்துக் கொண்டார். அதன் பின்னர் தீபாவளி முடிந்து 10 நாட்கள் கழித்து திரு.முகம்மது உபேஸ் எனது செல்போனில் தொடர்பு கொண்டு ஏன் இன்னும் என்னைப் பார்க்க வரவில்லை என்று கேட்டார். நான் அவரிடம் இன்னும் கடிதம் வரவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் கடிதம் வந்தவுடன் வாருங்கள் என்று சொல்லி போனை வைத்து விட்டார். அடுத்து ஒரு வாரம் கழித்து மீண்டும் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு கடிதம் வந்து விட்டதா என்று கேட்டார், நான் இன்னும் வரவில்லை என்று சொன்னேன். மீண்டும் கடந்த 30.11.2021-ம் தேதி மதியம் 12 மணியளவில் செல்போனில் பேசி கடிதம் வந்து விட்டதா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னவுடன் இந்த வாரம் அனுப்பி விடுவார்கள், அடுத்த வாரத்தில் என்னை வந்து பாருங்கள் என்று சொன்னார். அவர் சொன்னபடியே மறுநாள் 01.12.2021-ம் தேதியன்று எனக்கு செயற் பொறியாளர், பகிர்மானம், திருமங்கலம் அலுவலகத்தில் இருந்து வந்த கடிதத்தில் டிமாண்ட் டிராப்ட் மூலம் ரூ.24,500/-ஐ 30 தினங்களுக்குள் மின்வாரிய அலுவலகத்தில் செலுத்துமாறு கூறப்பட்டிருந்தது. எனவே, நேற்று 02.12.2021-ம் தேதி மதியம் சுமார் 03.15 மணியளவில் நான் திருமங்கலம் மின்சார அலுவலகத்திற்குச் சென்று உதவி பொறியாளர் திரு.முகம்மது உபேஸ் அவர்களை நேரில் சந்தித்து எனக்கு வந்த கடிதத்தைக் கொடுத்தேன். அவர் அதனை பெற்ற பின்பு, நான் கேட்ட பணம் ரூ.25,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று என்னிடம் கேட்டார்.

அதற்கு நான் அவரிடம் நீங்கள் கேட்கும் தொகை அதிகமாக உள்ளது, கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி, உங்களுக்காக 5,000/- ரூபாய் குறைத்துக் கொள்கிறேன், நாளைக்கு காலையில் 20,000/- ரூபாய் பணத்துடன் என்னை வந்து பாருங்கள், வரும் போது ரூ.24,500/-க்கு SE / MEDC / TANGEDCO / MADURAI என்ற பெயரில் கனரா வங்கியில் டிமாண்ட் டிராப்ட் எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி எனக்கு 30.11.2021 என்ற தேதியிட்டு வந்த கடிதத்தின் பின்பக்கத்தில் அதனை எழுதிக் கொடுத்தார். அப்போது நான் அவரிடம் நீங்கள் கேட்ட பணத்தை இன்னும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் சார் என்றேன், அதற்கு அவர் ஏற்கனவே குறைத்துத்தான் சொல்லியிருக்கிறேன், இதற்கு மேலும் குறைக்க முடியாது, பணம் கொடுத்தால் தான் மீட்டரை மாட்ட முடியும், இல்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டே இருக்க வேண்டியதுதான் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். நான் வீட்டுக்கு வந்து யோசித்துப் பார்த்தேன். கொரோனா காரணமாக எந்த வருமானமும் கிடைக்கவில்லை, விவசாயமும் சரியில்லை, இந்த சமயத்தில் இவ்வளவு பணம் லஞ்சம் கேட்கிறாரே என்று மிகவும் வருத்தமாக இருந்தது. அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அவர் எழுதிக் கொடுத்தபடியே திருமங்கலம் கனரா வங்கியில் இன்று காலை 10.00 மணிக்கு ரூ.24,500/-க்கு டிமாண்ட் டிராப்ட் எடுத்து விட்டேன். அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.20,000/- கொண்டு வந்துள்ளேன். இத்துடன் கடந்த 03.03.2010-ம் தேதி எனது பெயரில் இலவச விவசாய மின் இனைப்பு கேட்டு கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் எனக்கு கொடுத்த சான்றிதழ் அட்டை மற்றும் பணம் செலுத்துமாறு திருமங்கலம் செயற் பொறியாளர் அலுவலகத்திலிருந்து எனக்கு வந்த 04.10.2021 மற்றும் 25.11.2021-ம் தேதியிட்ட இரண்டு கடிதங்கள் ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். அதன் பேரில், அரசு இலவசமாக வழங்கும் விவசாய மின் இணைப்பைக் கொடுப்பதற்கு என்னிடம் ரூ.20,000/- லஞ்சம் கேட்கும் திருமங்கலம் உதவி மின் பொறியாளர் திரு. முகம்மது உபேஸ் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX** (பா.காட்டுராஜா), 03.12.2021.

**Sir, received the written complaint on 03.12.2021 at 13.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified**

through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 17/2021 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 14.00 hrs and took up investigation. Sd./-XXXXXX (A.Ambrose Jayaraja) 03.12.2021, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr. P.Katturaja, S/o Pandi Thevar, Muthiahpuram Pudur, Ponnamangalam, Tirumangalam Taluk, Madurai District along with Xerox copies of Acknowledgment Certificate, dated 03.03.2010, Two Letters of Executive Engineer, TANGEDCO, Tirumangalam, dated 04.10.2021 and 25.11.2021 are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

03/12/2021

(A.Ambrose Jayaraja)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.